தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மஞ்சூரில் தொடரும் கனத்த மழை; அணைகளில் நீர்மட்டம் உயர்வு

மஞ்சூர் பகுதிகளில், கடந்த ஒரு மாதமாக விட்டு, விட்டு சாரல் மழை பெய்தாலும், சில நேரங்களில் பலத்த மழை பெய்தது. தேயிலை செடிகள், மலை காய்கறி விவசாயத்திற்கு ஏற்ற சீதோஷ்ண நிலையாக மாறியது. மின் உற்பத்திக்கு பயன்படும் அணைகளிலும் தண்ணீர் இருப்பு அதிகரித்தது. நீராதாரங்களிலும் நீர் வரத்து அதிகரித்தது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு பலத்த காற்றுடன் சாரல் மழையுடன் கன மழையும் பெய்தது. சில இடங்களில் மரங்கள் விழுந்து, சிறிய அளவிலான மண் சரிவு ஏற்பட்டது. போக்குவரத்தில் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை. மழையால் காலை, மாலை நேரத்தில் குளிரான கால நிலை நிலவுகிறது.

### தரமான பருத்தி பயன்படுத்தி அதிக மகசூல் பெற அறிவுரை

தர்மபுரி : "தரமான பருத்தி விதைகளை சாகுபடிக்கு பயன்படுத்தி, நல்ல மகசூல் பெற்று, விவசாயிகள் அதிக லாபம் பெற வேண்டும்' என, தர்மபுரி விதை பரிசோதனை அலுவலர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, தர்மபுரி விதை பரிசோதனை அலுவலர் கமலா வெளியிட்ட செய்திக்குறிப்பு: தர்மபுரி மாவட்டத்தில், ஆடிப்பட்ட பருவத்துக்கு சாகுபடி மேற்கொள்ள ரகபருத்தி, வீரிய பருத்தி மற்றும் பி.டி., பருத்தி விதைகளை வாங்கும்போது, விதை விற்பனை, வணிக உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்களில் இருந்து மட்டும் விதைகளை வாங்க வேண்டும். பருத்தி ரகத்தின் விவர அட்டையில், பயிர் செய்ய உகந்த பருவம் மற்றும் உகந்த மாநிலம் போன்ற விவரங்களை சரிபார்த்து வாங்க வேண்டும்.மேலும், தாங்கள் வாங்கும் பருத்தி விதை குவியலுக்குரிய

முளைப்புத்திறன் பற்றிய அறிக்கையை விவசாயிகள் கேட்டு, சரிபார்த்து வாங்க வேண்டும். விதைகளின் தரத்தினை அறிந்து கொள்ள, தர்மபுரியில் செயல்பட்டு வரும் பரிசோதனை நிலையத்துக்கு, விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் பணிவிதை மாதிரிகள் அனுப்பி வைத்து, ஒரு பணி விதை மாதிரிக்கு பரிசோதனை கட்டணமாக, 30 ரூபாய் செலுத்தி விதைகளின் தரத்தை அறிந்து தரமான விதைகளை சாகுபடி செய்து, அதிக லாபம் பெறலாம்.இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

## <u>மரவள்ளி அறுவடை பணி தீவிரம் மாவு சத்துக்கேற்ற விலை நிர்ணயம்</u>

சத்தியமங்கலம்" சத்தியமங்கலம் பகுதியில், மரவள்ளி கிழங்கு அறுவடை தீவிரமாக நடக்கிறது. குச்சிக்கிழங்கின் மாவு சத்துக்கேற்ப விலை கிடைப்பதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சத்தியமங்கலம் மற்றும் கடம்பூர், தாளவாடி ஆகிய பகுதியில், 5,000 ஏக்கருக்கு மேல், விவசாயிகள் மரவள்ளிகிழங்கு பயிரிட்டுள்ளனர். மானாவரி நிலத்தில் மட்டும் பயிரிட்டு வந்த மரவள்ளி கிழங்கு, தற்போது கிணற்று பாசன விவசாயிகளும் சாகுபடி செய்கின்றனர். மரவள்ளி கிழங்கு பயிரால், வருமானம் அதிகம் கிடைக்கிறது. ஒரு ஆண்டு காலம் கொண்ட மரவள்ளி கிழங்கு, கிணற்று பாசனத்தில், மாவு சத்து அதிகம் கிடைக்கிறது. கரும்புக்கு பிழிதிறன் வைத்து விலை நிர்ணயம் செய்கின்றனர். பாலில், அதன் கொழுப்பு சத்து வைத்து விலை நிர்ணயம் செய்கின்றனர். இதேபோல், மரவள்ளி கிழங்குக்கு அதன் மாவு சத்துக்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்வதால், வளமாக வரும் பயிருக்கு கூடுதல் விலை கிடைக்கிறது. மேலும், 20 புள்ளி மாவு சத்து இருந்தால், ஒரு புள்ளிக்கு, 200 ரூபாய் வீதம், ஒரு டன்னுக்கு, 4,000 ரூபாய் விலை கிடைக்கிறது. 23 புள்ளிகள் இருந்தால், 210 ரூபாய் வீதம், டன் ஒன்றுக்கு, 4,830 ரூபாய் கிடைக்கிறது. 30 புள்ளிகள் இருந்தால், 250 ரூபாய் வீதம், டன் ஒன்றுக்கு, 7,500 ரூபாய் வரை குச்சிக்கிழங்கிற்கு விலை கிடைக்கிறது. மொத்தத்தில், சாதாரணமாக குச்சிக்கிழ

ங்கு, டன் ஒன்று குறைந்த பச்சம், 3,000 முதல் அதிகம் பட்சம், 7,500 ரூபாய் வரை வி லை கிடைப்பதால், விவசாயிக ள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## விதைப் பண்ணையில் ஆய்வு

நிலக்கடலை மற்றும் பருத்தி விதைப் பண்ணைகளில், வேளாண்மைத் துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். தரமான விதைகளை உற்பத்தி செய்து வழங்கவேண்டும் என்ற நோக்கத்தில், மாவட்டம் முழுவதும் பல்வேறு பயிர்களுக்கான விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆதார நிலை விதைகளைப் பயன்படுத்தி, அனைத்து தொழில்நுட்பங்களின் உதவியுடன் தரமான சான்று விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த நிலையில், செம்பட்டி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நிலக்கடலை (ஜெஎல்-24) விதைப் பண்ணையை, விதைச் சான்று உதவி இயக்குநர் பெ. விஜயராணி ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து, பழனி கவாலபட்டியில் உள்ள பருத்தி (அம்பார) விதைப் பண்ணையும் ஆய்வு செய்யப்பட்டது. பின்னர், புளியம்பட்டியில் செயல்பட்டு வரும் விதை சுத்திகரிப்பு நிலையத்தில் களவிதை மற்றும் சுத்திகரிப்புப் பணிகள் தொடர்பாகவும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது, விதைச் சான்று அலுவலர்கள் திருமலைசாமி, சின்னசாமி, ஜெயசந்திரன், பனிச்சாமி ஆகியோர் உடனிருந்தனர்.

## ஆடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சை முகாம்

தேனி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு நாள்கள், ஆடுகளுக்கான குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் நடைபெறுகிறது. அனைத்து கால்நடை மருத்துவமனை மற்றும் உதவி மருத்துவமனைகளில் நடைபெறும் இந்த முகாமுக்கு, அரசு விலையில்லா ஆடுகள் பெற்ற பயனாளிகள் மற்றும் ஆடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தங்களது ஆடுகளை கொண்டுவந்து, குடற்புழு நீக்கம் செய்து கொள்ளலாம் என்று, மாவட்ட ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி அறிவித்துள்ளார்.

## சிறுதானிய பயிர் இடுபொருள்கள் விநியோகம்

சிங்கம்புணரி அருகே எஸ். புதூர் ஒன்றியம் மேலவண்ணாயிருப்பில் மாநில சமவளர்ச்சி திட்டத்தின் கீழ் சிறுதானிய பயிர்களுக்கான இடுபொருள்கள்

விநியோக விழா நடைபெற்றது. விழாவுக்கு மேலவண்ணாயிருப்பு ஊராட்சி மன்றத் தலைவர் பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) அழகப்பன் மற்றும் வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் உழவர்களுக்கு சிறு தானியம் மற்றும் தீவனப் பயிர் சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றி எடுத்துக் கூறி இடுபொருள்கள் வழங்கப்பட்டன. மேலும் இவ்விழாவில் வேளாண்மை உதவி இயக்குநர் கண்ணன் வேளாண்மை அலுவலர் செல்லதுரை மற்றும் எஸ். புதூர் வட்டார வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டனர். விழாவில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு தீவனப் புல் மற்றும் தீவன சோளம் ஆகியவை வழங்கப்பட்டன.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தேனி பகுதியில் மாட்டு சாணத்திற்கான தேவை..அதிகரிப்பு:கேரளாவில் இயற்கை உரம் பயன்படுத்துவதால்**

போடி:கேரளாவில் இயற்கை உரங்களை அதிகம் பயன்படுத்துவதால், மாட்டு சாணத்திற்கு தேவை அதிகரித்துள்ளதால்,தேனி மாவட்டத்தில் மாடுகள் "கிடை' போடுவதில் கால்நடை வளர்ப்போர் ஆர்வம் காட்டிவருகின்றனர்.தமிழகத்தில் செயற்கை உரங்களையே அதிகமாக பயன்படுத்தி வருவதால் மண்ணின் தன்னை மட்டுமின்றி விளைச்சலும் குறைந்து, வறண்ட நிலமாக மாறி வருகின்றன. தற்போது உரங்களின் விலையும் அதிகரித்துள்ளது. எனவே இயற்கை உரங்களை பயன்படுத்த வயல் மற்றும் தோட்டங்களில் ஆடு,மாடுகளை கிடை போடுவதற்கு ஆடு, மாடுகளை வெளி மேய்ச்சலுக்காக மொத்தமாக அனுப்பி விடுகின்றனர்.

செயற்கை உரங்களை பயன்படுத்துவதால், மண்ணின் தன்மை மாறுபடுவதோடு, போதுமான விளைச்சலும் இல்லாமல் போய்விடுகிறது.கேரளாவை பொறுத்தவரை இயற்கை உரங்களான மாடுகளின் சாணங்களையே விவசாயத்திற்கு அதிகமாக பயன்படுத்துவதால் மண்ணின் தன்மை மட்டுமின்றி ஏலம், காப்பி, மிளகு, காய்கறி

விளைச்சலும் அதிரித்து பசுமை நிறைந்து காணப்படுகின்றன. இதனால் தமிழகத்தில் கிடைக்கும் இயற்கை சாணங்களை கொள்முதல் செய்வதில் கேரள விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தமிழகத்தில் போடி, கரட்டுப்பட்டி, முந்தல், சூலப்புரம், பொட்டிப்புரம், ஆண்டிபட்டி, ராஜபாளையம், அருப்புக்கோட்டை, விருதுநகர் உள்பட பல்வேறு பகுதிகளில் உள்ள கால்நடை வளர்ப்போர் இயற்கை உரங்களான சாணங்களை கேரளாவிற்கு ஏற்றுமதி செய்யும் வகையில் ஆடு, மாடுகளை கிடை போடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். கிடைக்கின்ற சாணங்களை மொத்தமாக ரோட்டில் போட்டு உலர்த்திய சாணங்களை கேரளா விவசாயிகள் லாரிகள் மூலம் லோடு கணக்கில் கேரளாவிற்கு வாங்கி செல்கின்றனர். போடி, ராஜபாளையம், அருப்புக்கோட்டை, விருதுநகர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து ஆட்டு புழுக்கை ஒரு லாரி முழுவதுமான லோடு 20 ஆயிரம் முதல் 25 ஆயிரம் ரூபாயும், மாட்டு சாணத்தை 12 ஆயிரம் ரூபாய் முதல் 17 ஆயிரம் ரூபாய் வரை கொள்முதல் செய்கின்றனர். லாரி வாடகை தனியாக வசூல் செய்து விடுகின்றனர். தேனி மாவட்டத்தில் ஆட்டு புழுக்கை லாரி வாடகை உட்பட லாரி 20 ஆயிரம் ரூபாயும், மாட்டு சாணம் 13 ஆயிரம் ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகின்றன. கொள்முதல் செய்யப்படும் இயற்கை உரங்களான சாணங்களை கேரளா பகுதியான ராஜாகாடு, என்.ஆர்.சிட்டி, மூணாறு, நெடுங்கண்டம், சாந்தாம்பாறை, உடும்பஞ்சோலா உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கின்றனர்.

## <u>தி.கோடு வேளாண் சங்கத்தில் ரூ.1 கோடிக்கு மஞ்சள் ஏலம்</u>

திருச்செங்கோடு: ஒரு கோடி ரூபாய் மதிப்பில், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், மஞ்சள் ஏலம் நடந்தது. திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி, மஞ்சள், நிலக்கடலை, எள், ஆமணக்கு உள்ளிட்ட விவசாய உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யபடுகிறது. மஞ்சள் வகைகள், தர்மபுரி மாவட்டம் அரூர், பொம்மிடி, ஈரோடு மாவட்டம் பவானி, அந்தியூர், சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, மேட்டூர், ஆத்தூர், தம்மம்பட்டி, மலையாளபட்டி, பெரம்பலூர், துறையூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விற்பனை வருகிறது.

இந்நிலையில், நேற்று நடந்த ஏலத்தில், விரலி ரகம், குவிண்டாலுக்கு, அதிகபட்சமாக, 7,319, குறைந்தபட்சமாக, 5,500 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள், அதிகபட்சமாக, 6,730, குறைந்தபட்சமாக, 4,300 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சமாக, 9,050, குறைந்தபட்சமாக, 7,500 ரூபாய்க்கு ஏலம் போனது. மொத்தமாக, ஒரே நாளில், 2,000 குவிண்டால் மஞ்சள் விற்பனை ஆனதில், ஒரு கோடி ரூபாய்க்கு விற்பனையானது.

## <u>வால்பாறையில் தொடரும் மழை; பி.ஏ.பி., அணை நீர்மட்டம் உயர்வு</u>

வால்பாறை : வால்பாறையில் தொடர்ந்து பெய்து வரும் கன மழையினால், பி.ஏ.பி.,அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துவருகிறது. வால்பாறையில், இந்த ஆண்டு பெய்த தென்மேற்குப்பருவ மழையினால் சோலையாறு அணை கடந்த முதல் தேதி நிரம்பியது. இதனையடுத்து சேடல் டேம் வழியாக பரம்பிக்குளத்திற்கு தொடர்ந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதே போல் காடம்பாறை அணை நிரம்பியதையடுத்து, அப்பர்ஆழியாறு வழியாக ஆழியாறுக்கும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இந்நிலையில் வால்பாறையில் கடந்த இரண்டு நாட்களாக இடைவிடாமல் கன மழை பெய்து வருவதால், நீர்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர்வரத்து அதிகரித்து வருகிறது. பருவ மழை தீவிரமடைந்துள்ள நிலையில் 160 அடி கொள்ளளவு கொண்டசோலையாறு அணையின் நீர் மட்டம் நேற்று 161.73 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 2,250 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து வினாடிக்கு 1,635 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையிலிருந்து சேடல்டேம் வழியாக பரம்பிக் குளத்திற்கு வினாடிக்கு 829 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதே போல் 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம் நேற்று காலை 65.10 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 1,681 கன அடி வந்து கொண்டிருக்கிறது.அணையிலிருந்து வினாடிக்கு 656 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. வால்பாறையில் பருவ மழை மீண்டும்

தீவிரமடைந்துள்ளதால், பி.ஏ.பி.,அணைகளின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்துவருகிறது.

மழைஅளவு

மேல்நீராறு அணையில் 7.6 செ.மீ.,: மழை; வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழை அளவு: (மி.மீ.,); சோலையாறு - 75, வால்பாறை - 43, கீழ்நீராறு - 47, மேல்நீராறு - 76, பரம்பிக்குளம் -28. அதிகபட்சமாக மேல்நீராறு அணைப்பகுதியில் 7.6 செ.மீ., மழை பெய்துள்ளது.

## <u>திராட்சை வெடிப்பதை தடுப்பது எப்படி ..ஆராய்ச்சி நிலையம் விளக்கம்</u>

கம்பம்:விதையில்லா திராட்சை பழங்கள் வெடிப்பதை தடுக்க விவசாயிகள் செய்ய வேண்டியது குறித்து கம்பம் பள்ளத்தாக்கு திராட்சை ஆராய்ச்சி நிலையம் விளக்கம் அளித்துள்ளது. தேனி மாவட்டத்தில் காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி பகுதிகளிலும், ஓடைப்பட்டி, வெள்ளையம்மாள்புரம், தென்பழனி பகுதிகளிலும் திராட்சை அதிக பரப்பில் சாகுபடியாகிறது. ஓடைப்பட்டி, தென்பழனி பகுதிகளில் கடந்த சில வாரங்களாக சாகுபடி செய்யப்பட்டுள்ள விதையில்லா திராட்சையில்பழங்களில் அதிகமாக வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதைத் தடுக்க முதலில் பூக்கள் மொட்டாக இருக்கும் போதே 8 பிபிஎம் ஜிப்பர்லிக் அமிலம் தெளிக்க வேண்டும். 15 நாட்கள் கழித்து 15 பிபிஎம் தெளிக்க வேண்டும். பூ பூக்கும் சமயத்தில் எதுவும் செய்யக் கூடாது. பூ பொறிந்த பின் காய் லேசாக பிடிக்க ஆரம்பிக்கும் போது 25 பிபிஎம் தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதால், இடைவெளி கிடைப்பதுடன் பழங்களுக்கு நீளவாட்டில் வளர்ச்சி கிடைக்கும்.

காய் நெருக்கமாக இருப்பது தான் பழங்கள் வெடிக்க முக்கிய காரணமாக அமைகிறது. ஒரு கொத்தில் 90 முதல் 140 பழங்கள் இருப்பது போல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு மேல் காணப்படும் போது கத்திரிக்கோலால் பழங்களை கலைத்து விட வேண்டும். பழங்கள் வெடிப்பதற்கு போரான், கால்சியம் போன்ற நுண்ணூட்டச் சத்துக்கள் குறைவும் காரணமாக இருக்கலாம்.

எனவே கால்சியம் புளோரைடு ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் மற்றும் போரான் ஒரு லிட்டர் தண்ணீருடன் ஒரு கிராம் கலந்து தெளிக்கலாம். காய் நிறம் மாறும் போது 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை தெளிக்க வேண்டும். இவ்வாறு தெளிப்பதால் பழங்களில் வெடிப்பு ஏற்படாது, என்றார். விளக்கம் பெற

விரும்பும் விவசாயிகள் திராட்சை ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் பேராசிரியர் பார்த்திபவை தொடர்பு கொள்ளலாம்.

**காய்கறி கழிவுகளிலிருந்து மண்புழு உரம் விற்பனை:நகராட்சி கூட்டத்தில் முடிவு**

பெரியகுளம்:பெரியகுளம் பகுதிகளில் காய்கறி மற்றும் ஓட்டல் கழிவுகளிலிருந்து, மண்புழு உரம் தயாரித்து,விற்பனை செய்யப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பெரியகுளம் நகராட்சி கூட்டம் தலைவர் ராஜா தலைமையில் நடந்தது. பொறியாளர் சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார்.கூட்டத்தில் கவுன்சிலர்கள், தலைவருக்கு இடையே நடந்த விவாதம்:பாண்டிச்செல்வி: இந்திராபுரித்தெருவில், மழை பெய்தால், தெருவின் நடுவில் சாக்கடை கழிவுநீர் செல்கிறது. பெண்கள் கழிப்பிட வசதி வேண்டும்.
தலைவர்: சாக்கடை கழிநீர் தேங்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும். மூன்றாந்தல் மற்றும் இந்திராபுரித்தெரு மக்கள் பயன்படுத்தும் கழிப்பிடங்கள், புதுப்பிக்கப்படும். 1 வது வார்டு முதல் 30 வார்டு வரை, ஓட்டல் மற்றும் மண்டபங்களிலிருந்து கொட்டப்படும் கழிவுகள் மற்றும் மார்க்கெட் காய்கறி கழிவுகளை, உரக்கிடங்கில் மண்புழு உரம் தயாரிக்கும் பணி நடக்கிறது. விரைவில் விற்பனை செய்யப்படும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### முழு கொள்ளளவு எட்டிய ஆழியாறு அணை

கோவை:கோவை மாவட்டம் ஆழியாறு அணை முழு கொள்ளளவான 120 அடியை எட்டியது.முழு கொள்ளளவு எட்டியதால் 3000 கன அடி நீர் 11 மதகுகள் வழியாக வெளியேற்றப்பட்டுள்ளது. தற்போது அணை 119.70 அடியாக உள்ளது.

### பெரியார் அணை நீர் மட்டம் அதிகரிப்பு

தேனி: முல்லை பெரியார் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. இன்று காலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 2749 கனஅடி நீர் வருகிறது. அணையின் நீர்

மட்டம் 126 அடியில் இருந்து 128.7 அடியாக உயர்ந்துள்ளது. பாசனத்திற்காக அணையில் இருந்து 500 கனஅடி வீதம் நீர் திறந்துவிடப்படுகிறது.

## வால்பாறையில் தொடர் மழை; சோலையாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்வு

வால்பாறை : கோவை மாவட்டம் வால்பாறையில், இந்த ஆண்டு பெய்த தென்மேற்கு பருவ மழையினால், சோலையாறு, காடம்பாறை, அப்பர்ஆழியாறு ஆகிய அணைகள் நிரம்பின. அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. மழையினால், 160 அடி கொள்ளளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று 163.12 அடியானது. ஒரே நாளில் இரண்டு அடி உயர்ந்துள்ளது.அணைக்கு வினாடிக்கு 4,147 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. வினாடிக்கு 3,214 கன அடி தண்ணீர் வெளியேற்றப் படுகிறது. அணையிலிருந்து சேடல்டேம் வழியாக பரம்பிக் குளத்திற்கு வினாடிக்கு 2,770 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழை அளவு: (மி.மீ.,) சோலையாறு_87, வால்பாறை_44, கீழ்நீராறு_62,மேல்நீராறு_94. அதிகபட்சமாக மேல்நீராறு அணைப்பகுதியில் 9.4 செ.மீ., மழை பெய்துள்ளது. **'பரம்பிக்குளம் அணை நீர் மட்டம் உயர்வு'** : சோலையாறு அணையிலிருந்து சேடல்டேம் வழியாக பரம்பிக்குளத்திற்கு தொடர்ந்து தண்ணீர் திறந்துவிடப்படுவதால், 72 அடி கொள்ளளவு கொண்ட பரம்பிக்குளம் அணையின் நீர்மட்டம், நேற்று காலை 66.15 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 3,357 கன அடி வந்து கொண்டிருக்கிறது; 656 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. பரம்பிக்குளம் அணை ஓரிரு நாளில் நிரம்பும் தருவாயில் உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அணைப்பகுதியில் 48 மி.மீ., மழை பெய்துள்ளது.

**தீவனத் தட்டுப்பாட்டுக்கு தீர்வு ஊறுகாய் புல்! கால்நடை ஆராய்ச்சியாளர்கள் அறிவுறுத்தல்**

கோவை : கால்நடைகளுக்கான தீவனத் தட்டுப்பாட்டை தவிர்க்க, விவசாயிகளை ஊறுகாய் புல் தயாரிப்பில் ஈடுபடுமாறு கால்நடை மருத்துவர்கள் அறிவுறுத்து கின்றனர். பசுந்தீவனங்கள் அதிகமாக கிடைக்கும் மழைக்காலங்களில், தேவை போக மீதம் இருப்பவற்றை பதப்படுத்தி, அவற்றை கோடைக் காலங்களில் பயன்படுத்துவதே ஊறுகாய் புல் தயாரிப்பு முறை. இதில், பசுந்தீவனப் பயிர்கள், பூக்கும் தருணத்தில் அறுவடை செய்தப்பின் உலர்த்தப்படுகிறது. பின், அவை சிறு துண்டுகளாக நறுக்கி குழியில் இட்டு, நன்றாக மிதிக்கப்பட்டு, காற்று வெளியேற்றப்படுகிறது. சிட்ரிக் அமிலம், தவிடு, மக்காச்சோளம், சுண்ணாம்புத்தூள் போன்ற பதப்படுத்த பொருட்கள் சேர்த்த பின், பாலித்தீன் கொண்டு மூடப்படுகிறது. இவ்வாறு மழைநீர், காற்று உள்ளே செல்லாதவாறு தொடர்ந்து பாதுகாக்கப்படும்போது, இரு மாதங்களில் ஊறுகாய் புல் தீவனம் உபயோகத்துக்கு தயாராகிவிடும். இதை வழங்குவதால், கால்நடைகள் நன்கு ஆரோக்கியமாக இருக்கின்றன. அதேசமயம், தீவனத்தட்டுப்பாடும் குறைக்கப்படுகிறது. கால்நடை மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில், 'ஊறுகாய் புல் தயாரிப்பின்போது, முற்றிப்போன மற்றும் தடிமான தண்டுடைய தீவனப்பயிர்களும் பதப்படுத்தப்படுவதால், அவற்றின் தரம் உயர்கிறது. பயிர்களின் ஈரப்பதம் பாதுகாக்கப்படுவதால் பசுந்தீவனத்தின் தன்மை மற்றும் சத்துகள் மாறுவதில்லை. எனவே, பசுந்தீவனம் கிடைக்காத கோடைக்காலங்களில் ஊறுகாய் புல்லை கால்நடைகளுக்கு அளித்து ஊட்டச்சத்து குறைபாடு இல்லாமல் பராமரிக்கலாம். பல ஆண்டுகளுக்கு கெட்டுப்போகாமல் அப்படியே இருக்கும் என்பதால் இவைகள் வீணாகாமல் கால்நடைகள் உட்கொள்ளும்' என்றனர். இம்முறை பெரும்பாலும் குளிர்பிரதேசங்களிலும், வட மாநிலங்களிலும் பரவலாக பயன்பட்டு வருகிறது. தீவன உற்பத்தி குறைவு, விலையேற்றம் உள்ளிட்ட காரணங்களால், தமிழகத்தில் கால்நடைகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

இதிலிருந்து விடுபட ஊறுகாய்புல் தயாரிப்பு நல்ல தீர்வாக அமையும். மேலும் விபரங்களுக்கு, 0422 2669965 என்ற எண்ணில், தொடர்பு கொள்ளலாம்.

## நிலக்கடலை வரத்து அதிகரிப்பு

உடுமலை : ஆனைமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் நிலக்கடலை அறுவடை தீவிரமடைந்துள்ளதால், உடுமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு வரத்து அதிகரித்துள்ளது. உடுமலை தேவனூர்புதூர், ஆனைமலை உள்ளிட்ட பகுதிகளில், மானாவாரி மற்றும் இறவை பாசனத்துக்கு நிலக்கடலை பயிரிடப்படுகிறது. தென்மேற்கு பருவமழையை அடிப்படையாகக் கொண்டு பயிரிடப்பட்ட சாகுபடியில், கடந்த சில நாட்களாக, அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.அறுவடை செய்யப்படும் நிலக்கடலையை, காய வைத்து விற்பனை செய்ய, விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனால், ஆனைமலை, சூலக்கல், கிணத்துக்கடவு போன்ற பகுதிகளில் இருந்து, உடுமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு நிலக்கடலை வரத்து அதிகரித்துள்ளது. நாள்தோறும் சராசரி 200 மூட்டை நிலக்கடலை, களங்களில் காய வைக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. கிணத்துக்கடவு, ஆனைமலை பகுதிகளில் மழை பெய்து வருவதால், நிலக்கடலையை காய வைப்பதில் விவசாயிகளுக்கு சிக்கல் நிலவுகிறது. எனவே, மழைப்பொழிவு இல்லாத உடுமலை பகுதி களங்களுக்கு, நிலக்கடலை அதிகளவு கொண்டு வரப்படுகிறது. ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நேற்றைய நிலவரப்படி, தரமான பச்சை நிலக்கடலை, கிலோவுக்கு சராசரி 28 ரூபாய் வரை, விலை கிடைத்தது. ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் சந்திரசேகர் கூறுகையில், "விவசாயிகள் நிலக்கடலையை காய வைத்து, இடைத்தரகர் இல்லாமல் விற்பனை செய்ய, ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சிறு வியாபாரிகள், கட்டணம் செலுத்தி, விற்பனை கூட களங்களை பயன்படுத்துகின்றனர். இதனால்,

உடுமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு, நிலக்கடலை வரத்து அதிகரித்துள்ளது," என்றார்.

**<u>வறட்சி மாவட்டங்களுக்கு காவிரி, கிருஷ்ணா நீரை கொண்டு வர அரசு தீவிரம்</u>**

பெங்களூரு:வறட்சி மாவட்டங்களில் குடிநீர் பஞ்சத்தை தவிர்க்கும் வகையில், கிருஷ்ணா, காவிரியின் கூடுதல் தண்ணீரை, மத்திய கர்நாடகாவுக்கு கொண்டு வர, அரசு, தீவிரமாக ஆலோசித்து வருகிறது. 300 டி.எம்.சி., நீர்:கர்நாடக மாநிலத்தில், மழைக்காலத்தில் வீணாக கடலில் சேரும் தண்ணீரை சரியான முறையில் பயன்படுத்தி, வறட்சி பாதித்த மாவட்டங்களுக்கு குடிநீர் வழங்க வேண்டும் என்பது அரசின் எண்ணம். இத்திட்டம் வெற்றியடைந்தால், ஆண்டு தோறும், உ00 முதல் 300 டி.எம்.சி., நீர் கிடைக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. மழைக்காலத்தில், காவிரி நீர், வீணாக கடலில் கலக்கிறது. இப்படி வீணாகும் தண்ணீரை, நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். இத்துடன், ஹேமாவதியின் கூடுதல் நீரை, மழைக்காலத்தில், சிவகங்கை மூலம், திப்பகொண்டனஹள்ளி அணைக்கு கொண்டு வர வேண்டும். இவ்வாறு செய்தால், வறட்சி மாவட்டங்களுக்கு தண்ணீர் வழங்கலாம். மேலும், வறட்சி பாதிப்புள்ள எட்டு மாவட்டங்களில், ஏரி, குளம், குட்டைகளை இயற்கையான முறையிலேயே நிரப்பலாம் என, நீர்ப்பாசனத் துறை வல்லுனர்கள், மாநில அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். இதுமட்டுமின்றி, அதிக மழை பெய்யும் சந்தர்ப்பத்தில், ஆந்திராவின் அணைகள் நிரம்பி, கிருஷ்ணா நதிக்கு தண்ணீர் வருகிறது. இதனால், கிருஷ்ணா நதியிலிருந்து, தினமும், 2.5 லட்சம் கன அடிநீர், கடலில் சேருகிறது. இது போன்ற நேரத்தில், அலமாட்டி அணையிலிருந்து, கூடுதல் தண்ணீரை, துங்க பத்ரா அணையில் பாய வைத்து, அங்கிருந்து, மத்திய கர்நாடகாவுக்கு எடுத்து செல்வது, அரசின் ஆலோசனையாகும். சட்டத்துறை அமைச்சர் ஜெயசந்திரா கூறியதாவது:நதி நீர் பங்கிடு தொடர்பாக, தீர்ப்பாய தீர்ப்பில் தெளிவுப் படுத்தியிருப்பதால், மழைக்காலத்தில் கூடுதல் நீரை பயன்படுத்தி கொள்வதில் சட்ட சிக்கல் ஏதும் ஏற்படாது.கூடுதலாக, காவிரி நீர் கர்நாடகாவின் இக்கோரிக்கைக்கு, அண்டை மாநிலமான ஆந்திராவும் சம்மதித்துள்ளது. காவிரி நடுவர் நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பின் படி, தமிழகத்துக்கு, 192 டி.எம்.சி., தண்ணீர் திறந்து விட வேண்டும்.

மழைக்காலத்தில், தமிழகத்துக்கு, கூடுதலாக, காவிரி நீர் செல்கிறது. இம்முறை, மழை காலத்திலும் கூட, தமிழகத்துக்கு அதிக நீர் பாய்ந்துள்ளது.காவிரி நடுவர் நீதிமன்றம் நிர்ணயித்த இறுதி தீர்ப்பின் படி, தமிழகத்துக்கு நிர்ணயித்த அளவு நீரை வழங்கிய பின், கூடுதல் நீரை, கர்நாடக பயன்படுத்தி கொள்ள எந்த பிரச்னையும் இல்லை. இதனால், மேகே தாட் அருகில், காவிரியில், இரு தனித்தனி அணைகள் கட்டப்படும். தமிழகத்துக்கு தர வேண்டிய தண்ணீரின் அளவை, காவிரி நடுவர் நீதிமன்றம் நிர்ணயிப்பதற்கு முன்னரே, மேகே தாட் அருகில், 70 டி.எம்.சி., தண்ணீரை சேகரிக்க, இரு அணைகள் கட்ட வேண்டுமென்று ஆலோசிக்கப் பட்டது. இதில் சேகரிக்கப்படும் தண்ணீரை பயன்படுத்தி, நீர் மின் உற்பத்தி செய்யவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. கர்நாடகா பவர் கார்ப்பரேஷன் லிமிடெட் மூலம் மின் உற்பத்தி மையங்கள் அமைக்க, முதல்வர் சித்தராமையா தலைமையில் நடந்த கூட்டத்தில் ஒப்புதலும் பெறப்பட்டது. வறட்சி பாதிப்புள்ள பகுதிகளுக்கு, மாற்று வழிகளில் தண்ணீர் கொண்டு வர, தேசிய நதி நீர் விதிமுறைகளிலும் இடம் உள்ளது. எனவே, இந்த திட்டத்தை செயல்படுத்துவதில், பெரிதாக எந்த சட்ட சிக்கலும் ஏற்படாது என, உச்ச நீதிமன்றத்தில், கர்நாடகா சார்பில் வாதிடும் வழக்கறிஞர் நாரிமன், அரசின் ஆலோசனைக்கு பச்சை கொடி காண்பித்துள்ளார். இவரது ஆலோசனையின் படி, நதிநீர் இணைப்பு திட்டம் செயல்படுத்தப்படும்.

இவ்வாறு, அவர் தெரிவித்தார்.

**வேளாண் கூட்டுறவு வங்கியில் 50 சதவீத மானியத்தில் விதை நெல் வழங்கல்**

மன்னார்குடி : திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகில் உள்ள லெட்சுமாங்குடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில், மானியத்தில் விதை நெல் வழங்கும் விழா நடந்தது. இதில், கலெக்டர் மதிவாணன் தலைமை வகித்தார். உணவுத்துறை அமைச்சர் காமராஜ் பங்கேற்று, 50 சதவீத மானியத்தில் விதை நெல் வழங்கி பேசியதாவது: வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்க உத்தர விட்டுள்ளார். அதன் அடிப்படையில், தொடக்க கூட்டுறவு சங்கங்கள் மூலமாக, 44 லட்சம் வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலமாக, 94.5 லட்சங்களும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், அனைத்து வகையான சான்று பெற்ற

விதைகள் வழங்கப்படும். ஒரு விவசாயிக்கு அதிக பட்சமாக, 20 கிலோ விதை வழங்கப்படும். மேலும் சம்பா பருவத்திற்கு, 5,639 மெட்ரிக் டன் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள்மூலமாக, 600 டன் விதைகள் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கூறினார்.விழாவில், கூட்டுறவு இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன், கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் சங்கர் உட்பட பலர் பங்கேற்றனர்.

## தரமான பருத்தி பயன்படுத்தி அதிக மகசூல் பெற அறிவுரை

தர்மபுரி : "தரமான பருத்தி விதைகளை சாகுபடிக்கு பயன்படுத்தி, நல்ல மகசூல் பெற்று, விவசாயிகள் அதிக லாபம் பெற வேண்டும்' என, தர்மபுரி விதை பரிசோதனை அலுவலர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, தர்மபுரி விதை பரிசோதனை அலுவலர் கமலா வெளியிட்ட செய்திக்குறிப்பு: தர்மபுரி மாவட்டத்தில், ஆடிப்பட்ட பருவத்துக்கு சாகுபடி மேற்கொள்ள ரகபருத்தி, வீரிய பருத்தி மற்றும் பி.டி., பருத்தி விதைகளை வாங்கும்போது, விதை விற்பனை, வணிக உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்களில் இருந்து மட்டும் விதைகளை வாங்க வேண்டும். பருத்தி ரகத்தின் விவர அட்டையில், பயிர் செய்ய உகந்த பருவம் மற்றும் உகந்த மாநிலம் போன்ற விவரங்களை சரிபார்த்து வாங்க வேண்டும்.மேலும், தாங்கள் வாங்கும் பருத்தி விதை குவியலுக்குரிய முளைப்புத்திறன் பற்றிய அறிக்கையை விவசாயிகள் கேட்டு, சரிபார்த்து வாங்க வேண்டும். விதைகளின் தரத்தினை அறிந்து கொள்ள, தர்மபுரியில் செயல்பட்டு வரும் பரிசோதனை நிலையத்துக்கு, விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் பணிவிதை மாதிரிகள் அனுப்பி வைத்து, ஒரு பணி விதை மாதிரிக்கு பரிசோதனை கட்டணமாக, 30 ரூபாய் செலுத்தி விதைகளின் தரத்தை அறிந்து தரமான விதைகளை சாகுபடி செய்து, அதிக லாபம் பெறலாம்.இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>விவசாய நீர்ப்பாசனம் சூரிய ஒளி மின்சக்தி மோட்டார் நிறுவும் பணி ரூ.2.37 கோடி மானியம் 69 விவசாயிகள் பயன்</u>**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகளுக்கு சூரிய ஒளி மின்சக்தியினை விவசாய நீர்பாசனத்திற்கு உபயோகிக்க வேளாண் பொறியியல் துறை மூலம் சூரிய ஒளி மின்சக்தி மோட்டார்கள் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது. ரூ.2.37 கோடி மானியத்தில் விவசாயிகள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின்கீழ் வேளாண் பொறியியல் துறை மூலம் புதுகை ஒன்றி யம், வடவாளம், ராயப்பட்டி கிராமத்தில் முதன்முதலாக சதாசிவம் என்ற விவசாயியின் தோட்டத்தில் சூரிய ஒளி மின்சக்தி வாயிலாக இயங்கும் பம்ப்செட் நிறுவப்பட்டுள் ளது. இதனை கலெக்டர் மனோகரன், வேளாண் பொறியியல் துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து கூறியதாவது: மின்பற்றாக்குறையை சரிக்கட்டும் விதமாக இத்திட்டம் அமைந்துள்ள தாலும், காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரையில் கிடைக்கும் சூரிய வெப் பத்தை கொண்டு இந்த மோட்டார் இயங்குவதா லும், தடை யில்லா விவசாயத்திற்கு பாசனநீர் கிடைப் பது விவசாயிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மும்முனை மின் சாரம் இல்லாத நிலையிலும், சூரிய ஒளி மின்மோட்டார்கள் மூலம் பாசனம் செய்யும் வாய்ப்பு உள்ள தால் விவசாயிகள் கவலையின்றி விவசாயம் செய்ய முடியும் என்றார். பயனாளி சதாசிவம் கூறுகையில், இத்திட்டம் எனக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். இத்திட்டத்திற்காகவே, புதியதாக போர் போட்டு, பைப் இறக்கி இவ்வமைப்பு எனது நிலத்தில் நிறுவப்பட்டுள்ளது. மின்சாரத்தைப்பற்றி சிறிதும் கவலையின்றி வெயிலைப் பொறுத்து தொடர்ச்சியாக நீர் இறைக்கலாம். பம்பு மூலம் நீர் வெளியேறும் அளவு மிகவும் திருப்திகரமாக இருக்கிறது. இதுவரை நெல் மட்டுமே சாகுபடி செய்து வந்தேன். வருங்காலங்களில் கரும்பு, வாழை போன்ற பணப்பயிர்களும் காய்கறிகள் மற்றும் மலர்கள் ஆகியவைகளை யும் பயி

ரிட்டு, அதிக அளவில் மகசூல் ஈட்டுவேன் என்றார். புதுகை வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் அறிவழகன் கூறியதாவது:சோலார் பம்புசெட் 4.800 வாட்ஸ் திறனுடைய சூரிய தகடுகளான அடுக்குகள் மற்றும் அதனை தாங்கி நிற்கும் அமைப்பு, பம்பு செயல்பாட்டினை கட்டுப்படுத்தும் கருவி, இன்வெர்டர், 5 எச்பி ஏசி பம்பு (10 ஸ்டேஜஸ்) ஆகியவை களைக் கொண்டது. இத்திட்டத்தின் குறிக்கோள் விவசாயிகளின் நீர்ப்பாசன தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மரபுசாரா எரிசக்தியில் இயங்கக்கூடிய பாசன வசதியினை ஏற்படுத்தித் தருதல் மற்றும் மின்சாரத்தை எதிர்நோக்கி இல்லாமலும், பிற எரிபொருள் (டீசல்) செலவின்றியும், இயற்கையாக செலவின்றி கிடைக்கும் சூரிய சக்தி யினை விவசாய நீர்பாசனத்திற்கு உபயோகிக்க வழிவகை செய்தலும் ஆகும். இத்திட்டம் வேளாண்மைக்குப் பெரிதும் உதவக்கூடியதாகவும், பாரம்பரிய எரிசக்தி பயன்பாட்டிற்கு மாற்றாகவும் விளங்குகிறது. பகலில் தொடர்ந்து தடை யற்ற பாசனத்திற்கும் தொடர் செலவினம் இல்லா மல் நீடித்து உழைக்கும் அமைப்பாகவும் உள்ளது. 2012-13, 2013-14ம் ஆண்டுக்கான திட்டங்களின் கீழ் ஆழ்குழாய் கிணறு மற்றும் திறந்த வெளி கிணறு நீரினை இறைப்பதற்கு 5 எச்பி திறன் கொண்ட ஏசி நீர் மூழ்கி பம்புகள் 69 எண்கள் புதுகை மாவட்டத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது திறந்த வெளிக்கிணறுகளுக்கு மட்டும் சூரிய ஒளி மின்சக்தி மோட்டார்கள் நிறுவிட விண்ணப்பங்கள் விவசாயிகளிடமிருந்து வரவேற்கப்படுகிறது. இதில் ஆழ்குழாய் கிணறு 5எச்பி ஏசி நீர்மூழ்கி சோலார் பம்பு மொத்த விலை ரூ. 4,39,950, அரசு மானியம் 80 சதவீதம், ரூ 3,35,200, மானியமாக கிடைக்கும். விவசாயிகளின் பங்களிப்பாக 20 சதவீதம் ரூ. 1,04,750 கட்ட வேண்டும். இதேபோல் திறந்த வெளி கிணறு 5 எச்பி ஏசி நீர்மூழ்கி சோலார் பம்பு மொத்த விலை ரூ.5,01,512 அரசு மானியம் ரூ.3 லட்சத்து 84 ஆயிரம், விவசாயிகளின் பங்களிப்பு ரூ.1,17,512. இத்திட்டம் புதுகை மாவட்டத்தில் 69 விவசாயிகளுக்கு ரூ.2 கோடியே 37லட்சத்து 68 ஆயிரம்

மானியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றார். ஆய்வின்போது, எம்எல்ஏ கார்த்திக் தொண்டைமான், உதவி செயற்பொறியாளர் சிதம்பரம், இளநிலைப் பொறியாளர் அன்புநாதன் மற்றும் பொறியாளர்கள் உள்பட பலர் உடனிருந்தனர்.

**விவசாயிகளுக்கு பாராட்டு**

சுற்றுச்சூழல் நலனுக்கேற்ற, பராமரிப்பு இயக்குதலுக்கு எளிதான நீண்ட நாள் செயல்பாடு திறனுடைய சூரிய ஒளி மின்மோட்டார்களை வேளாண் பொறியியல் துறை மூலம் அரசு மானியத்தில் நிறுவி பயனடைந்த மாவட்ட விவசாயிகளை கலெக்டர் மனோகரன் பாராட்டினார். எரிபொருள் சிக்கனம்

தொலை தூரப் பகுதிகளுக்கும், மின் இணைப்பு தற்பொழுது வழங்க இயலாத பகுதிகளுக்கும் இந்த அமைப்பை ஏற்படுத்தி கொடுக்க முடிகிறது. மின் சேமிப்பு மற்றும் எரிபொருள் சிக்கனத்திற்கு உதவிபுரிகிறது.

## தரமான விதைகள் விற்பனை? வேளாண்துறை உறுதிபடுத்த விவசாயிகள் வலியுறுத்தல்

ஈரோடு, : தரமான விதைகள் மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றது என்பதை வேளாண்துறையினர் உறுதிபடுத்த வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, மேட்டூர் மேற்கு கரை வாய்க்கால், கீழ்பவானி வாய்க்கால், காலிங்கராயன்வாய்க்கால் உள்ளிட்ட பாசனங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதையடுத்து சாகுபடி பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. பெரும்பாலும் பாசன பகுதிகளில் நெல் அதிக அளவில் பயிரிடப்பட்டு வருகின்றது. இந்த ஆண்டு வழக்கத்தை விட கூடுதலாக 40 சதவீதம் அளவுக்கு நெல்சாகுபடி நடக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகின்றது. இந்நிலையில், போலி விதைகள் மாவட்டத்தில் விற்பனை செய்யப்பட்டு வருவதாக விவசாயிகள் புகார் கூறி வருகின்றனர். ஆனால் இதை தடுக்க

வேளாண்துறையினர் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் உள்ளதாக விவசாயிகள் குற்றம்சாட்டி உள்ளனர். போலி விதைகளால் பாதிக்கப்படும் விவசாயிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து வருகின்றது. போலி விதைகளின் புழக்கம் அதிக அளவில் உள்ளதால் விவசாயிகள் கடைகளில் விதைகள் பெறுவதற்கே அச்சப்படும் நிலை இருந்து வருகின்றது. இதே போல போலி மருந்துகளும் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக களைகொல்லி மருந்துகளில் போலி அதிக அளவில் புழக்கத்தில் உள்ளது. ஈரோடு மாவட்டத்தில் சான்று பெற்ற விதைகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வருவதை வேளாண்துறையினர் உறுதிபடுத்த வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர். இது குறித்து தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட அமைப்பு செயலாளர் லோகுசாமி கூறுகையில், ''மாவட்டத்தில் போலி விதைகளும், மருந்துகளும் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இது குறித்து பல முறை புகார் அளித்தும் வேளாண்துறையினர் மவுனம் காத்து வருகின்றனர். போலி விதைகளால் பாதிக்கப்படுவது விவசாயிகள் மட்டுமே. தற்போதைய நிலையில் விவசாயம் செய்வது என்பதே அரிதாக உள்ளநிலையில் போலி விதைகளால் விவசாயிகள் பெரிய அளவில் நஷ்டத்தை சந்திக்க வேண்டி உள்ளது. எனவே மாவட்டத்தில் சான்று பெற்ற விதைகள் மட்டுமே விற்பனை செய்யப்படுகின்றது என்பதை வேளாண்துறையினர் உறுதியளிக்க வேண்டும். மேலும் பராம்பரிய நெல் ரகங்களை பயிரிட ஊக்குவிக்கும் வகையில் நடப்பு ஆண்டில் 200 ஏக்கரில் காஞ்சிக்கோவில் பகுதியில் மட்டும் பயிரிட அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர். இதை மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கும் விரிவுபடுத்த வேண்டும்,''என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>நடவு பணியில் விவசாயிகள் தீவிரம் : தர்மபுரி மாவட்டத்தில் தொடர் மழை</u>

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், சில தினங்களாக பெய்து வரும் மழையை அடுத்து, விவசாயிகள், சாகுபடி பணியில், ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். தர்மபுரி மாவட்டம், விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில், சில ஆண்டுகளாக, போதிய பருவமழை பெய்யாததால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு வந்தனர். குறிப்பாக, சில ஆண்டுகளாக மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை, விவசாயிகளை ஏமாற்றி வந்தது. இந்தாண்டும், தர்மபுரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யாமல் ஏமாற்றியதால், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், மாவட்டத்தின் பல பகுதிகளில், சில தினங்களாக, பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்ததுடன், விவசாய நிலங்களை உழுது, பயிர்களை நடவு செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தர்மபுரியை சேர்ந்த விவசாயி சுப்பிரமணி கூறியதாவது:

தர்மபுரி மாவட்டத்தில், சில ஆண்டுகளாக, தென்மேற்கு பருவமழை குறைவாகவும், வடகிழக்கு பருவமழை சராசரியாகவும் பெய்து வருகிறது. இந்தாண்டு கோடை இறுதியிலும், தென்மேற்கு பருவமழை துவக்கமான, ஜூன் முதல் வாரத்திலும், தர்மபுரி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. குறிப்பாக, மாரண்டஹள்ளி, பாலக்கோடு ஆகிய பகுதிகளில், அதிகளவு மழையளவு பதிவானது. இதை நம்பி, மானாவரி பயிர்களை சாகுபடி செய்த விவசாயிகள், கடுமையாக பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், வழக்கம்போல், வடகிழக்கு பருவ மழை நெருங்கும் நேரத்தில், தர்மபுரி மாவட்டத்தில், சில தினங்களாக, மழை பெய்து வருகிறது. இதனால், தென்மேற்கு பருவமழை காலத்தில் நடவு செய்த பயிர்கள், உயிர் பிடித்து வருகிறது. இவற்றை பாதுகாக்கும் வகையில், பயிர்களுடன் வளர்ந்து வரும் களைகளை, விவசாயிகள் அகற்றி வருவதுடன், பயிர்களுக்கு

தேவையான உரங்களை இட்டு வருகின்றனர். மேலும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகள், தங்களது நிலங்களை உழவு செய்து வருவதுடன், மானாவரி மற்றும் இறவை பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். குறிப்பாக, மாவட்டத்தில் உள்ள அணை மற்றும் ஏரி பாசன வசதியை பெரும் விவசாயிகள், வடகிழக்கு பருவமழை, இந்தாண்டு கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில், நெல் மற்றும் கரும்பு உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்ய தேவையான ஆயத்த பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு கூறினார்.

**<u>ஆழியாறு அணையின் நீர்மட்டம் மெல்ல உயருது... தொடர் கண்காணிப்பில் அதிகாரிகள்</u>**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி ஆழியாறு அணையின் நீர்மட்டம் கிடு..கிடு..வென உயர்ந்து வருகிறது. அணை நிரம்ப மூன்று அடியே உள்ளதால், அதிகாரிகள் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள ஆழியாறு அணை பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் முக்கிய அணையாக உள்ளது. இந்த அணையில், சேகரிக்கப்படும் தண்ணீர் பழைய ஆயக்கட்டு, புதிய ஆயக்கட்டு, கேரள நீர் பாசனத்திற்கும் தண்ணீர் வழங்கப்படுகிறது. இது தவிர, குடிநீர் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழைய ஆயக்கட்டு பாசனத்தில் உள்ள ஆறு ஆயிரத்து 400 ஏக்கர் நிலங்களும்; புதிய ஆயக்கட்டு பாசனத்தில் 42 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன. பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு ஆழியாறு ஆறு மூலமாகவும்; புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு வேட்டைக்காரன்புதுார் கால்வாய் வழியாகவும் தண்ணீர் வழங்கப்படுகிறது. போதிய மழை இல்லாததால், அணையின் நீர்மட்டம் குறைந்தது. அணை நீர்மட்டம் குறைந்து வந்ததால், விவசாயப்பணிகள் பாதிப்பு மற்றும் குடிநீர் தட்டுப்பாடு போன்ற பிரச்னைகள் எழுமோ என்ற அச்சமும் நிலவியது. இந்நிலையில், கடந்த ஒரு மாதமாக தொடர் மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டமும் கிடு...கிடு..வென வெகுவாக உயர்ந்து வருகிறது. ஆழியாறு அணையின் மொத்த கொள்ளளவான 120 அடியில், 100 அடியை கடந்த மாதம் ஆறாம் தேதி எட்டியது. தொடர்ந்து, மழையில்லாத

போதும் அணைக்கு நீர் வரத்து இருந்ததால், அணை நீர்மட்டம் மெல்ல மெல்ல உயர்ந்தது. கடந்த 23ம் தேதி அணை நீர்மட்டம் 115 அடியை எட்டியதால், பொதுப்பணித்துறை அதிகாரிகள் மூலம் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆற்றோர கிராம மக்கள் பாதுகாப்பாக இருக்க எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. இந்நிலையில், போதிய மழையில்லாததால், அணை நீர்மட்டம் மெல்ல உயர்ந்த நிலையில், கடந்த இரண்டு நாட்களாக தொடர் மழை பெய்து வருவதால், நேற்று மட்டும் அணை நீர்மட்டம் ஒரு அடி உயர்ந்தது. நேற்றைய நிலவரப்படி 120 அடி கொள்ளளவு கொண்ட அணை தற்போது, 117.80 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 1300 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. குடிநீர் மற்றும் பாசனத்திற்காக வினாடிக்கு 165 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. 5.2 மி.மீ., மழை பதிவாகியிருந்தது.

**'முழு கொள்ளளவை 2 நாட்களில் எட்டும்'**

'மழை தொடர்ந்து நீடித்தால், அணை முழு கொள்ளளவை இரண்டு நாட்களில் எட்டும் என எதிர்பார்க்கிறோம். தற்போது, அணை நீர்மட்டம் 117 அடியினை எட்டியுள்ளதால், தொடர் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன,' என பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 10 காசுகள் சரிவு 290 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 300 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 10 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 290 காசுகளாக சரிவடைந்து உள்ளது. பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–335, ஐதராபாத்–273, விஜயவாடா, தனுகு–295, பார்வாலா–280, மும்பை–328, மைசூர்–325, பெங்களூர்–320, கொல்கத்தா–342,

டெல்லி–315. கறிக்கோழி கிலோ ரூ.75–க்கும், முட்டைக்கோழி கிலோ ரூ.55–க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவற்றின் விலைகளில் மாற்றம் செய்யப்படவில்லை.